# தமிழக சிறைகளிலிருந்து 1600 ஈழத் தமிழர் விடுதலையாவர்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

36 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 18 இதழ் 362
யாழ்ப்பாணம் புதன்கிழமை 01-02-1995


(சென்னை)
தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தில் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் 140 பேர் விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகளில் தமிழ்நாடு அரசு தற்போது ஈடுபட்டுள்ளது, தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 140 பேரும் இவர்களுடன் தொடர்பு வைத்திருந்
(4ம் பக்கம் பார்க்க)

## ஓய்வுபெறும் தினத்தன்றே ஓய்வூதிய பணிக்கொடை

(கொழும்பு)
அரசாங்க ஊழியர்கள் ஓய்வுபெறும் தினத்தன்றே அவர்களுக்கு இரண்டு வருடப் பணிக்கொடை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை அரசு இப்போது மேற்கொண்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதியத்தை
(4ம் பக்கம் பார்க்க)

# ...ரசு-புலிகள் பேச்சு தேக்க நிலையில் ஒரு திருப்பம்
# ...மாதான முயற்சியை பாராட்டி
# ...ரோப்பியசமுதாயம் அறிக்கை
## ...பாருளாதார உதவிகளை வழங்குவதாகவும் உறுதி

[லண்டன்]
...கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளை ஐரோப்பிய பொருளாதார அமைப்பு பாராட்டி நேற்று விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அரசுக்கும் புலிகளுக்கும் பேச்சுவார்த்தைகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையில் இது ஒரு திருப்பத்தை ஏற்படுத்திவிடும் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.
(2ம் பக்கம் பார்க்க

## ஒரு கட்டத்தை எட்டும் வரை பேச்சுக்களை கொழும்பில் நடத்தக் கூடாது

(கொழும்பு)
திட்டவட்டமான ஒரு கட்டத்தை எட்டும் வரை பேச்சுவார்த்தையைக் கொழும்புக்குக் கொண்டு வரக்கூடாது என ஜனாதிபதியின் நெருங்கிய சகாவும். யாழ். சென்ற பேச்சுவார்த்தைக் குழுவில் அங்கம் வகித்தவருமான திரு. ராஜன் ஆசீர்வாதம் தெரிவித்துள்ளதாக சண்டே ரைம்ஸ்
(4-ம் பக்கம் பார்க்க)

## ...சமாதான முயற்சிகளில் ...தமிழ் ...த்துஜீவிகள் பங்களிப்பு குறைவு
### ஒப்சேவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)
...ான முயற்சிகளில் ...புத்திஜீவிகளின் பங்...மிகக் குறைவானதாக ...து என சண்டே ...ர் தெரிவித்துள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் துறையைச் சேர்ந்த சசங்க பெரேரா எழுதிய கட்டுரை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
(2-ம் பக்கம் பார்க்க)

## தற்கொலை படை பிரிவு கொழும்பில் ஊடுருவல்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப் பிரிவுப் பெண் போராளிகள் இருவர் தற்பொழுது கொழும்பு நகருக்குள் ஊடுருவியுள்ளதாக திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது.

அவ்விருவரையும் தேடும் பணியை, இராணுவம் மற்றும் பொலிஸ்பிரிவினர் முடுக்கி விட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. க-ரி

## ...பச்சுக்கு குந்தகம் விளைவிக்க ...ட்டணி நடந்து கொள்ளாது

[கொழும்பு[
...தலைப் புலிகளுக்கும் அர...த்திறகும் இடையில் ...பெற்றுவரும் சமாதா...பேச்சுவார்த்தைகளுக்கு ...கம் ஏற்படுத்தக்கூடிய ...பிலான எந்த ஒரு அரசி...இயக்கத்தையும் அமைக் ...த்தேசம் எதுவும் தமி...விடுதலைக் கூட்டணிக்கு கிடையாது என்று த.வி.கூ. உபதலைவர் திரு. வீ. ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் விளைவாக வரையப்படக் கூடிய எந்தஒரு அரசியல் தீர்வுதிட்ட யோசனைகளும் புதிய அரசியலமைப்பில் சேர்க்கப்பட வேண்டுமென்பதிலேயே த.வி.கூ. நம்பிக்கை கொண்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் கட்சிகளைச் சேர்ந்த 27 எம். பி.க்களும் அண்மையில் இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான திரு எஸ்,
(4ம் பக்கம் பார்க்க]

## நடமாடும் மின் விநியோகம் ஆரம்பிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் நடமாடும் மின்சார சேவையைத் தற்காலிகமாக மேற்கொள்வதற்கான அனுமதியைப் பெறுவதற்காக, இலங்கை மின்சார சபையின் யாழ். மாவட்டப் பொறியியலாளர் திரு. எஸ். வல்லிபுரம் தற்போது
(2ம் பக்கம் பார்க்க)

## அக்கரைபற்று பகுதியில் 12 கடைகள் தீக்கிரை

(கொழும்பு)
அக்கரைப்பற்றுப் பகுதியில் 12 கடைகள் கடந்த சனிக்கிழமை தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கடைகள் தீக்கிரையாக்கப்பட்டதனால் 10 லட்சம் ரூபா வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தீவைப்புக்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும், இது தொடர்பாகத் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப் படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். -ரி

## ...ண்காணிப்புகுழு இதுவரை ...பூரணமாக இயங்கவில்லை!

[கொழும்பு)
...ரசுக்கும் விடுதலைப் புலி...கும் இடையேயான ...தல் தவிர்ப்பு உடன்...டை கண்காணிக்கும் ...யாழ்ப்பாணத்திற்கு இது...ரயும் செல்லவில்லை.

யாழ். பிரதேசத்தில் மோதல் தவிர்ப்பு கண்காணிப்பு குழுவுக்கு தலைமை வகிக்கும் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த பிரதிநிதி கடந்த 14 நாட்களாக கொழும்பிலேயே தங்கியுள்ளார்.

இதேவேளை இந்தக் கண்காணிப்பு குழுவினர் மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை, திருகோணமலை ஆகிய இடங்களுக்கு ஏற்கனவே சென்றுவிட்டபோதி
(4ம் பக்கம் பார்க்க)

## இன்று படகு சேவை நடைபெருது

(யாழ்ப்பாணம்)
கிளாலி-பூநகரிபடகு சேவை இன்று நடைபெறமாட்டாதென தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்துறை அறிவித்துள்ளது.

வரி விளம்பரம்

விநியோகம்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான மண்ணெண்ணை விநியோகம் நாளை 2-ந் திகதி வியாழக்கிழமையும், மறுநாள் வெள்ளிக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. மாணவர் அவை.
(சி-1388)

# கமக்காரர் அறிமுக அட்டை 40,000விவசாயிகள்பெற்றனர்

(யாழ்ப்பாணம்)
வடபகுதியில் இதுவரை 40,000 விவசாயிகள் கமக்காரர் அறிமுக அட்டையைப் பெற்றுள்ளனர் என 'தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி அவர்கள மேலும் தெரிவிக்கையில்:

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் உற்பத்தியைப் பெருக்கவும், தன்னிறைவைக் காணவும், சுய சார்புப் பொருண்மியத்தைக் கட்டியெழுப்பவும் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

இவற்றில் ஒன்ருக கமக்காரர் அறிமுக அட்டை வழங்கும் திட்டம் வடதமிழீழம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வடதமிழீழத்திற்கு மட்டுப் படுத்தப்பட்ட அளவில் கிடைக்கும் உள்ளீடுகள் எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்கவேண்டுமானுல் இப்படியான ஒரு அறிமுக அட்டை அவசியம் தேவைப் படுகின்றது. இதேபோன்று அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள், ஊக்குவிப்புகள் சேவைகள், உள்ளீட்டு விநியோகம் ஆகியவை உண்மையான விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்வதற்கு இவ்வறிமுக அட்டை அவசியமாகின்றது.

விவசாய பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் பாதிக்கப் படாமல் உரிய காலத்தில் உள்ளீடுகள் வழங்க நடவடிக்கை எடுப்பதற்கும் கமக்கார அறிமுக அட்டை அவசியமாகின்றது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக விவசாய வளங்களை இனங்கண்டு திட்டமிட்ட முறையில் பயன்படுத்தி விவசாய உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கும் அறிமுக அட்டை தேவைப்படுகிறது. இந்த தேவைகளின் அடிப்படையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வட தமிழீழம் முழுவதும் கமக்கார அறிமுக அட்டை விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

எந்த ஒரு விவசாயியும் தனது பகுதி உற்பத்திக் குழுவிடம் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று கேட்கப்பட்ட விபரங்களை பூர்த்தி செய்து அவ்விண்ணப்பப படிவத்துடன் பயிரிடும் காணிகளின் படத்தையும் தனது $3\frac{1}{2} X 2\frac{1}{4}$ அங்குல அளவிலான கிராம சேவகரால் உறுதிப்படுத்தப் பட்ட இரு புகைப்படத்தையும் உற்பத்திக் குழுவிடம் கொடுப்பதன் மூலம் கூடிய விரைவில் கமக்கார அறிமுக அட்டையை பெற்றுக் கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் திட்டமிட்ட முறையில் ஒரு நிலைத்துநிற்கக் கூடிய விவசாய அபிவிருத்திக்கு கமக்கார அறிமுக அட்டையின் பயன்பாடு அவசியம் தேவைப்படும். அத்துடன் சகல வகையான விவசாய உள்ளீடுகளும் கமக்கார அறிமுக் அட்டையில் பதிவு செய்தே எதிர்காலத்தில் வழங்கப்பட உள்ளது. ஆகவே எதிர்காலத்தில் தங்களுக்கு ஏற்படும் சிரமத்தை தவிர்ப்பதற்காகவும் சகல உள்ளீடுகளையும் தேவைசளையும் கடன் வசதிகளையும் பெற வாய்ப்பாகவும் உடனடியாக அனைத்துத் தேவைகளையும் தங்கள் பகுதி உற்பத்திக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு கமக்கார அறிமுக அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
-சி

## மூக்குக்கண்ணுடி விநியோகம்

(பண்டத்தரிப்பு)
வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் வறுமை நிலையிலுள்ள கண்பார்வை குறைந்தவர்களுக்கு மூன்ருவது கட்டமாக எதிர்வரும் 3-ம் திகதி வெள்ளிக்கிழமையன்று இலவச மூக்கு கண்ணுடிகளை வழங்கவுள்ளது.

ஏற்கனவே கண்பரிசோதிக்கப்பட்டு பதிவு செய்தவர்களுக்கே இந்த மூக்கு கண்ணுடி வழங்கப்படவுள்ளது. -72

## இலங்கை வங்கி பொன்விழா

(யாழ்ப்பாணம்)
இலங்கை வங்கியாழ். மேற்தரக் கிளையின் பொன்விழா பூர்த்தியை முன்னிட்டு நாளை இரண்டாம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் முருகன் ஆலயத்தில விசேட பூசையும், பிற்பகல் 4 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். அடைக்கல அன்னை தேவாலயத்தில் (ஓ எல். ஆர்) விசேட திருப்பலி ஒப்புக் கொடுத்தலும், நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவவேண்டி நடத்தப் படும்.

## ஆசிரியர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)
சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கானவிசேடகருத்தரங்கு இன்று புதன்கிழமை பி ப. 2 மணிக்குமானிப்பாய்மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று கோட்டப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.
-ரி

நிரந்தர நியமனம் வழங்குமாறு

# கண்டியில் 3000 பட்டதாரிகள்மறியல்

(கொழும்பு)
பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக சுமார் மூவாயிரம் பட்டதாரிகள் கண்டியில் மறியல் போராட்டம் ஒன்றை நேற்று முன்தினம் நடத்தியதாகக் கொழும்புப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: பட்டதாரிகளுக்குரிய நிரந்தர நியமனமும் அதற்கான சம்பளமும் தமக்கு வழங்கப்பட வேண்டுமெனக் கோரியே மறியல் போராட்டம் நடத்தப்பட்டதாக தெரிவித்துள்ளது. -க

# 65 நோயாளிகளுக்கு கண் சிகிச்சை

[நெல்லியடி]
எதிர்வரும் 3 ம் திகதியும், 17 ம் திகதியும் மந்திகை மருத்துவமனையில் கண்வைத்திய நிபணர் டாக்டர் குகதாசனினுல் நடாத்தப்படவிருக்கும் கண் கிகிச்சைக் கிளினிக்கில் இதுவரை சுமார் 65 பேருக்குமேல் பதிவுசெய்துள்ளனர்.

எக்காரணம் கொண்டும் இவ்விரு தினங்களிலும் மேலதிகமாக எவரும்பார்வையிடப் பட மாட்டார்களென்றும்அடுத்த மாதம் மார்ச்முதல்வாரத்தில் நடைபெறவுள்ள சிகிச்சைக்கு தமது பெயர்களை பதிவுசெய்யும் நோயாளிகள் 18-2-95 முதல் மந்திகை மருத்துவமனையில் பதிவுசெய்து கொள்ளலாமென பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்,
160 சு

## சமாதான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் புத்திஜீவிகளின் மெளனம், பாரதூரமான விவுளைகளை அனுமதிப்பதாகிவிடும் என்றும், பேச்சுவார்த்தை தோலவியுற்ருல் அதற்குச் சிங்கள அல்லது தமிழ்ப் பேரினவாதிகளை அல்லது புலிகளை மட்டும் குற்றஞ் சாட்டக்கூடாது. மெளனமாக இருக்கும் தமிழ்ப் புத்திஜீவிகளையும் குற்றம் சாட்ட வேண்டும் என்றும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
-ரி

# 1400 இளைஞர்களுக்கு மேசன் வேலை பயிற்சி

(கொழும்பு)
தேசிய இளைஞர் சேவை மன்றம் 1400 இளைஞருக்கு இவ்வருடத்தில் மேசன்வேலை தச்சுவேலை ஆகியவற்றில் பயிற்சியளிக்கவிருக்கிறது.

மட்டக்களப்பு. திருகோணமலை, வவுனியா உட்பட 21 மாவட்டங்களிலிருந்து இப்பயிற்சி நெறிக்கான பயிலுனர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

ஆரம்பப் பயிற்சிகளில் சித்தியடைவோர் மேலதிக பயிற்சிக்காக தொழில் நுட்பக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

# மிதிவெடிவெடித்து குடும்பஸ்தர் படுகாயம்

[நெல்லியடி[
விறகு வெட்டுவதற்காக பனை வடலிக்குச் சென்றவரின் கத்தி தவறுதலாக அங்கு புதைக்கப்பட்டிருந்த மிதிவெடியின் மேல் வீழ்ந்ததுல அக்குடும்பஸ்தர் முகம் முழுவதும் காயங்களுக்கிலக்காகி மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தொண்டமாறு கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றது.

பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து பொலிகண்டியில் வசித்துவரும் செபமாலை இன்ஞசிப்பிள்ளை (வயது 50) என்பவரே படுகாயமடைந்தவராவார். (160 சி)

## அரசு புலிகள்

(1-ம் பககத தொடாச்சி)

இலங்கையில் சமாதானத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்குத்தேவையான பொருளாதார உதவிகளை வழங்குவதற்கு தாம் தயாராக இருப்பதாக ஐரோப்பிய சமுதாயம் அந்த அறிக்கையில் முக்கியமாக தெரிவித்துள்ளது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்று இப்போது அமுலில் இருந்தாலும், இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்றை காண்பதற்கு பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப்புலிகள் இன்னும் இணக்கம் தெரிவிக்கவில்லை என்றே கூறப்படுகின்றது.

எனினும் ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் நேற்றுவெளியிட்ட விசேஷ அறிக்கையானது விடுதலை புலிககளைப் பேச்சுவார்த்தைக்குப் போவதற்கு ஒரு உந்து சக்தியாக அமையும் என அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இனப்பிரச்னை சம்பந்தமான பேச்சுவார்த்தையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஒரு தொய்வுநிலை ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில் ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் இந்த அறிக்கை ஒரு முக்கிய இடத்தையே பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளைப்பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்த சர்வதேச சமுதாயம் ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தின் 'இந்த அறிக்கையைப் பயன்படுத்திக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர். (இ)

## பாடசாலை சேவை சிற்றூர்தி கட்டண விபரம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையத்தினுல் இன்று 1-ம் திகதி புதன்கிழமை தொடக்கம் யாழ். மாவட்டத்தில் பாடசாலை சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகளினுல் அச்சேவைகட்கு மாதம்தோறும் அறவிடப்படும் கட்டண விபரங்கள் கீழே அறிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| அச்சுவேலி | — | யாழ்ப்பாணம் | 400 ரூபா |
| புத்தூர் | — | யாழ்ப்பாணம் | 350 ரூபா |
| நீர்வேலி | — | யாழ்ப்பாணம் | 300 ரூபா |
| கோப்பாய் | — | யாழ்ப்பாணம் | 275 ரூபா |
| மூளாய் | — | யாழ்ப்பாணம் | 400 ரூபா |
| சங்கானை | — | யாழ்ப்பாணம் | 400 ரூபா |
| வட்டுக்கோட்டை | — | யாழ்ப்பாணம் | 400 ரூபா |
| மானிப்பாய் | — | யாழ்ப்பாணம் | 250 ரூபா |
| சண்டிலிப்பாய் | — | யாழ்ப்பாணம் | 300 ரூபா |
| ஆனைக்கோட்டை | — | யாழ்ப்பாணம் | 200 ரூபா |
| உடுவில் | — | யாழ்ப்பாணம் | 250 ரூபா |
| தாவடி | — | யாழ்ப்பாணம் | 250 ரூபா |
| கோண்டாவில் | — | யாழ்ப்பாணம் | 250 ரூபா |
| மல்லாகம் | — | யாழ்ப்பாணம் | 325 ரூபா |
| புன்னலைக்கட்டுவன் | — | யாழ்ப்பாணம் | 320 ரூபா |
| உடும்பராய் | — | யாழ்ப்பாணம் | 275 ரூபா |
| கோண்டாவில் | — | யாழ்ப்பாணம் | 250 ரூபா |
| திருநெல்வேலி | — | யாழ்ப்பாணம் | 200 ரூபா |
| அச்செழு | — | உடுவில் | 300 ரூபா |
| ஏழாலை | — | உடுவில் | 300 ரூபா |
| மிருசுவில் | — | யாழ்ப்பாணம் | 550 ரூபா |
| கொடிகாமம் | — | யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| சாவகச்சேரி | — | யாழ்ப்பாணம் | 400 ரூபா |
| நுணுவில் | — | யாழ்ப்பாணம் | 325 ரூபா |
| கைதடி | — | யாழ்ப்பாணம் | 300 ரூபா |

நடமாடு

[1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு சென்றுள்ளார்.

வலி-கிழக்கு, வலி-மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளுக்கு ஜெனரேட்டர்கள் மூலம் நடமாடும் மின்சார சேவையை ஆரம்பிப்பதற்காக மின்சார சபை திட்டமிட்டுள்ளது.

இதன் பிரகாரம் லொறிகளில் ஏற்றப்பட்ட ஜெனரேட்டர்கள், மின்சாரம் அத்தியாவசியமாகத் தேவைப்படும் பகுதிகளுக்குக் கொண்டு சென்று சிலமணித்தியாலங்கள் மின்விநியோகம் மேற்கொள்ளப்படும். இது சுழற்சி முறையில் நடைமுறைப்படுத்தப் படும்.

இதுபோன்ற நடைமுறையை உள்ளூராட்சிச் சபைகளும் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பாதை திறப்பு விடயத்தில் அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஓர் இணக்கம் ஏற்பட்டால் மேற்படித் திட்டம் உடனடியாகச் செயற்படுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படுமென்று மின்சார சபையின் சிரேஷ்ட உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.
வி-ரி

சைக்கிள்

## இலக்கத்தகடு விநியோகம்

(அரியாலை)
யா. மாநகர சபையின் யாழ். போதனு வைத்திய சாலைக்கு அருகாமையிலுள்ள கிளைக் காரியாலயத்தில் தற்பொழுது சைக்கிள் (லைசென்ஸ்) இலக்கத் தகடுகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

நல்லூரிலுள்ள தலைமைக் காரியாலயத்திலும் சைக்கிள் இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்படுவதாக தெரியவருகின்றது. -59

மரமே உன்னடி நிழல்— என்
மன நிம்மதி·

### மணிவாக்கு

நேரம் என்பது தான் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரே செல்வம். அந்தச் செல்வத்தை எப்படிச் செலவுசெய்ய வேண்டுமென்ற உரிமை உங்கள் ஒருவருக்குத்தான் கொடுக்கட்பட்டிருக்கின்றது. உங்களுடைய அந்தச் செல்வத்தை மற்றவர்கள் ஏமாற்றித் தங்களுடைய சுய நலத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ள அனுமதித்து ஏமாந்து விடாதீர்கள்.

— கார்ல்லேண்ட்பர்க்

## நமது நோக்கு

### அப்பிள் மயக்கம்!

அப்பிள் பழ இறக்குமதிக்குப் பத்துக்கோடி ரூபா அன்னியச் செலவாணி விரயமாகிறது எனச் செய்திவந்துள்ளது.

''ஒருநாளைக்கு ஒரு அப்பிள் ஒருத்துவரைத் தூரவைக்கும்!'' (An apple a day keeps the doctor away) என்பது ஆங்கிலப் பழமொழி.

அதன் தொனிப்பொருள் என்ன? கனிப்பொருட்களும் வைட்டமின்களும் நிறைந்த அப்பிள் போன்ற பழவகைகள் நாளாந்த உணவிற் சேரவேண்டும் என்பதே!

அதன் தொனிப்பொருளை உணராது, அப்பிளில் மாத்திரம் தான் போசாக்குண்டு என்ற மயக்கத்திஞல், உள்ளூர்ப் பழவகைகளை ஒதுக்கிவிட்டுஅன்னியப் பழவகைகளைநாடலாமா?

மக்கள் வாழும் மண்ணிலிருந்து கிடைக்கும்உணவு வகைகளே உடல்நலத்திற்குப் போதுமானது. உடல் வலுவைத் தருவது என்பதை ஏனோ நாம் மறந்து போகிறோம், விளம்பரங்களில் மயங்கி!

இதனல் — 'ஒரு நாளைக்கு ஒரு அப்பிள் பணத்தை வெளியே விரட்டுகிறது!' (an apple a day drives the money away) என்ற புதிய பொருண்மியப் பழமொழி உருவாகி உள்ளதை மக்கள் உணர வேண்டும்.

உள்ளூரில் விளையும் மா, பலா, தோடை, வாழை, பப்பாசி போன்றவற்றின் உணவுப் பெறுமதிகள் சாதாரணமானவையா?

சுகாதாரக் கல்விப் பணியகத்தைச் சேர்ந்த டாக்டர் ஹரிச்சந்திரா மேலும் சில திடுக்கிடும் தகவல்களைத் தந்துள்ளார்.

உற்பத்தியாகும் பழவகைகளில் ஐம்பது சதவீதம்தான் உள்ளூரில் பயன்படுத்தப்படுகின்றது. 10 சதவீதம் ஏற்றுமதியாகிறது. மிகுதி 40 சதவீதம்விரயமாகிறது

இதிலிருந்து தெரிவதென்ன? ஏற்றுமதிக்குப் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. மக்கள் பழவகைகளின் போசாக்குத் திறனை உணர்ந்து நாளாந்த உணவிற் சேர்ப்பதில்லை.

பதினிடல், பழப்பாதுகாப்பு ஆகியவற்றின் தொழில்நுட்ப அறிவு கிராம மட்டத்திற்குப் பரவ வழிகாணவேண்டும்.

போலி மயக்க விளம்பரங்களிலிருந்து விடுபட்டு உள்ளூர்ப் பழவகைகளின் பாவனை அதிகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்!

ஐ. தே. க. அரசு இறக்குமதிசெய்த

## 16 ஆடம்பர வாகனங்கள் ஏலத்தில் விற்கப்படும்

[கொழும்பு]

கடந்த ஐ. தே. கட்சி அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்த ஆடம்பர வாகனங்களில் 16 வாகனங்கள் இம்மாதம் 12ந் திகதி முற்பகல் 10 மணியளவில் செச்சுரிபாயவில் அரசாங்க ஏலவிற்பனையாளரினுல் ஏலத்தில் விடப்படும்.

கடந்த வருடம்நவம்பர்5-ம் திகதியளவில்ஒன்பது வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்ததன் மூலம் அரசாங்கம் ஒரு கோடி 70 லட்சம் ரூபாவை சோரிக்கக் கூடியதாக இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இம்மாதம் 12ம் திகதியளவில் ஏலத்தில் விடப்படும் வாகனங்களில் 7 வாகனங்கள் பி. எம் டபிள்யூ. ரகத்தைச் சேர்ந்தவையென்றும் எஞ்சியவை பென்ஸ் ரகத்தை சேர்ந்தவையென்றும் இதன் மூலம் அரசாங்கத்திற்கு 3 கோடி ரூபா கிடைக்குமென்றும் கொள்கை திட்டமிடல் பணிப்பாளர் இராமனுஜம் தகவல் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த ஆட்சிக் காலத்தின் ஆடம்பர சொகுசு கார்கள் இறக்குமதிக்காக பெருமளவு பணம் விரயமாக்கப்பட்ட பற்றி பொதும்க்கள் தரப்பில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டதும் தற்போதைய அரசாங்கம் இது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததும் தெரிந்ததே. க

எகிப்தில்

## அலெக்சாந்தரின் புதைகுழி கண்டுபிடிப்பு

(லண்டன்)

மாமன்னர் அலெக்சாந்தர் புதைக்கப்பட்ட இடம் எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டதாக புதைபொருள் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

மாசிடோனியா நாட்டின் மாபெரும் படை வீரரான அலெக்சாண்டர் பாபிலோனியாவில் மரணமானுர் எனவும் சிரியாவிற்கும் பின்னர் எகிப்துக்கும் அவரது உடல் இழுத்துச் செல்லப்பட்டதாகவும் வரலாற்ருய்வாளர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் மேற்கத்திய பகுதியான சீபா என்ற இடமும்; மத்தியதரைக்கடல் துறைமுகமான அலெக்சாந்திரியாவும், அலெக்சாந்தர் புதைக்கப்பட்ட இடங்களாக இருக்கக்கூடும் என்ற கருத்து அறிஞர்கள் மத்தியில் நிலவுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. -க

ராஜீவ் கொலை வழக்கு

## விசாரணையை தொடர்ந்து நடத்த இடைக்காலஉத்தரவு

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணையைத் தொடர்ந்து நடத்துமாறு கோரும் இடைக்கால உத்தரவை புதுடில்லி உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் பிறப்பித்தது.

முன்னர் ஜெயின் கமிஷன் விசாரணை வரம்பை விரிவாக்கும்வரை மட்டுமே இந்நீதிமன்றம் அனுமதிக்கவில்லையென்றும் அந்நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணைகள் குறிக்கப்பட்ட சில காலமாக நடத்தப்படாமல் இருத்ததுதெரிந்ததே. க

### பலதும் பத்தும்

#### கலைஞர் மைத்துனர்!

பிரபல பாடகர் சிதம்பரம் ஜெயராமன் காலமாஞர் எனச் செய்தி வந்துள்ளதல்லவா? அவரது குரல் தனித்துவமானது; பாணியும் தனித்துவமானது அதனுல்... சினிமாத்துறையில் நிலைத்து நிற்கவில்லை. டி. எம்.சௌந்திரராசன்..! சிவாஜி, எம். ஜி. ஆர். போன்ற பிரபல நடிகர்களுக்கு ஏற்றமாதிரிக் குரலை மாற்றிப்பாடியதால் தான் நிலைத்து நின்றராம்!

15-9-44ல் ஒர்நிகழ்ச்சி ..! அன்று தான் கலைஞர் கருணநிதி சிதம்பரம் ஜெயராமனின் தங்கை பத்மாவை மதச்சடங்குகள் எதுவுமற்ற சுயமரியாதை முறையில திருமணம் செய்தார் அதே நாளில் ஜெயராமனுக்கு வைதீகமுறைப்படி திருமணம் நடந்தது. விசேட நிகழ்ச்சியாக கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் ''கிந்தனுர்'' நிகழ்ச்சியும் இருந்ததால் ஏராளமான மக்கள் கூடியிருந்தார்களாம்!

பி. கு. 1948ல் கலைஞரின் மனைவி பத்மா முத்து என்ற மகனை பெற்றபின் மரணமாகி விட்டாராம்!

— மயூரன்

## பாரம்பரிய கலைகள் வளர்த்தெடுக்கபடவேண்டும்

(யாழ்ப்பாணம்)

தமிழரின் பாரம்பரிய வாத்தியங்களான தோல் வாத்தியங்கள், நரம்பு வாத்தியங்களைக் கண்டுபிடித்தவன் தமிழன் இந்தவகையான வாத்தியங்கள் போர்முனைகளிலும் பாவிக்கப்பட்டு வருவதொன்ருகும், போராட்டத்துடன், எமது பாரம்பரிய கலைகளும் வளர்த்தெடுக்கப்படவேண்டும் இந்தவகையில்எமது போராளி வசந்தன் தமது போராட்டத்துடன், கலையையும் கற்றுக்கொண்டது அவர் கலை உலகில் காட்டும் ஆர்வம் என்றேகூற வேண்டும்.

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில அண்மையில் நடைபெற்ற போராளி வசந்தனின் மிருதங்க அரங்கேற்ற விழாவுக்குத் தலைமைதாங்கி உரையாறறிய கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தனது தலைமை உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; இன்று மிருதங்க அரங்கேற்றம் பெறும் செல்வன் வசந்தன் கலை உலகுக்குப் புதியவரல்ல. இதுஇவரது குடும்பரீதியாக வளர்ந்ததொன்ருகும். தமிழீழப்போராட்டத்துடன் எமது கலைகளுக்கு நெருங்கிய தொடர்பு உண்டு, இக்கலை எமது விடுதலைப் போராட்டத்துக்கு அத்திவாரமாக உள்ளதாகும், எமது பேராளிகள் போராட்டத்துடன் மட்டும் நின்றுவிடாது பலவகையான கலைகளையும் கற்றிருக்கவேண்டியது அவசியமாகிறது,

எமது அமைப்பு ஒரு கூட்டுக்குடும்பமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இதில் டாக்டர்கள், கட்டிடக்கலைஞர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் போன்ற சகலதுறைகளைச் சேர்ந்தவர்களும் அங்கம் வகிக்கிருர்கள். தமிழுக்கும் இசைக்கும் நீண்ட பாரம்பரியம் உண்டு. எமது தலைவரின் நீண்ட பயணத்தில் எமது எல்லோருடைய உறவும் நீடிக்க வேண்டும். இந்தவகையில் நாம் கலைஞர்களை எமது நாட்டுக்கு உருவாக்கித்தருவோம என்றும் தெரிவித்தார். -162

### சிரமதானப்பணி

(கொழும்புத்துறை)

கோப்பாய் றோமன் கத்தோலிக்க வித்தியாசாலை மாணவர்களினுல் அப்பாடசாலையை சூழவுள்ள காணிகள் கடந்த 30ம் திகதி திங்கட்கிழமை காலை 7-30 மணி தொடக்கம் சிரமதானப்பணி மூலம் துப்பரவு செய்யப்பட்டது. (154)

## இராசி பலன்

1-2-1995

புதன்கிழமை

(தமிழுக்கு தை 18)

துதியை பின்னிரவு 3-18 வரை, அவிட்டம் பிற்பகல் 4-19 வரை மரணயோகம், இராகுகாலம் நண்பகல் 12-36 முதல் 2-06 வரை, சுபநேரம் மாலை 5-06 முதல் 6-37 வரை.

மேடம், சுபகாரியம், தொழில் உறவு, உற்சாக நிலை.

இடபம்: குடும்ப விரோதம், நண்பர் அறிவுரை, வீண் விரயம்.

மிதுனம்; நெஞ்சுக்கு வேதனை, பணமுடை, அலைச்சல்.

கடகம்: வேதாந்தம், கடன் பகை, அமைதிக்குறைவு.

சிங்கம்: தனவிருத்தி, காரிய சித்தி, முயற்சி பலிதம்.

கன்னி; புதிய சிந்தனை, விருந்துபசாரம், தெய்வீக செலவு.

துலாம்: பயனற்ற செய்ல், காரிய தாமதம், நம்பிக்கையீனம்.

விருச்சிகம்: முரண்டு பிடித்தல், குடும்ப பகை, உடல் அசதி.

தனுசு: எதிர்பாராத பாராட்டு, தொழில் பெருமை, விருந்தினர் வருகை.

மகரம்: வீண்பழி, ஆசாரக் குறைவு, சகோதரபகை.

கும்பம்: தியானம். பிரச்னைக்குத் தீர்வு, உறவினர் சிறப்பு.

மீனம்; அந்நியர் சகவாசம், பணவரவு, மனமகிழ்ச்சி.

ஜோஸ்யர்

## இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் இன்று 1ம் திகதி தென்மராட்சி வரணிக் கிராமத்தில் பனைவளத் தொழில் மேம்பாட்டுக்கான ஆய்வினை நடத்தவுள்ளனர்.

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

(ஆனைப்பந்தி)

யாழ்.இந்து மகளிர்கல்லூரி பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம இம்மாதம் 11ம் திகதி நடைபெறுமென தெரிவிக்கப்படுகின்றது. 101

பண்டத்தரிப்பு ஜெசிந்த றோ. க

## வித்தியாலயம் மீண்டும் பழைய இடத்திற்குமாற்றம்

(பண்ணத்தரிப்பு)

கடந்த இரண்டரை வருடங்களாக இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் மானிப்பாயில் இயங்கிவரும் பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் இம் மாதம் 20ம் திகதி தொடக்கம் மீண்டும் பழைய இடத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

மேற்படி வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்தபுதன்கிழமையன்று வித்தியாலய அதிபர் அருட் சகோதரி லூயிஸ் மேரி தலைமையில் நடைபெற்றபோது இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தற்போது மானிப்பாய் சென். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் ஒருபகுதியில் இயங்கிவ்ரும் இந்த வித்தியாலயத்தை மீண்டும் பண்டத்தரிப்புக்கு இடமாற்றம் செய்யப் வேண்டுமென்று பல பெற்றோர்கள் ஏகோபித்த கருத்து தெரிவித்ததையடுத்து ஏகமனதாக பாடசாலையை பழைய இடத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதென்று முடிவு செய்யப்பட்டதாக இது பற்றி தெரிவிக்கப்படுகின்றது. 72

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-02-01

புதன் இரவு

08-01 குயிலோசை வேலணையூர் சுரேஸ் எழுதிய ''இது உழைப்பவர் தேசம்''

08-20 ஏர்முனை ''வீட்டுத் தோட்டம்'' உரைச் சித்திரம்

08-30 செய்திகள்

08-40 நாடகம் சந்திரா தனபாலசிங்கம் எழுதிய ''தெளிவு''

09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

1995-02-02

வியாழன் காலை

07-02 மாவீரவணக்கம்

07-15 விடுதலை கீதங்கள்

07-30 செய்திகள்

07-35 பத்திரிகைச் செய்திகள்

07-40 விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

### தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

1995-02-01

புதன் மாலை

05-00 ஒலிபரப்பு ஆரம்பம்

05-01 சிந்தனைக்குச் சில விநாடிகள்

05-02 எழுச்சி கீதம்

05-10 புதியவை

05-15 படப் பாடல்கள்

05-30 அறிவூற்று

06-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்

06-02 உங்கள் தெரிவு

06-15 விளையாட்டுச் செய்திகள்

06-20 உங்கள் தெரிவு

06-30 மாலை ஒலிபரப்பு யாவும் நிறைவு பெறும்

வடக்கு-கிழக்கு

# முஸ்லிம்களின் சம்மதமின்றி எந்தத் தீர்வும் எட்டமுடியாது

## — அஷ்ரப் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் சம்மதமின்றி எவ்வித தீர்வும் செயற்படுத்த முடியாது என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் சண்டே லீடர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

எந்த விதத்தில் பேச்சுவார்த்தை நடத்தியது என்பது பற்றி நான் எதுவும் கூற விரும்பவில்லை. என்றும் முஸ்லிம் காங்கிரஸ் மௌனமான பார்வையாளராக இருக்க விரும்புகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் அப்பேட்டியில் தெரிவித்துள்ளதாவது: ஏனைய தமிழ் முஸ்லிம் கட்சிகளையும் சேர்த்து பேச்சுவார்த்தை நடத்தினால் நல்லது தான் ஆனால் ஜனாதிபதி எங்களை கேட்டுத்தான் முடிவு எடுக்க வேண்டும் என்பது தவறு.

சிலவேளைகளில் உரிய கட்டம் வரும்போது அவர் எங்களுடன் கலந்தாலோசிக்கவும் கூடும்.

அரசாங்கம் குழப்ப நிலையிலிருக்கிறது என்று கூறப்படுதல் சரியல்ல. குழப்ப நிலையிலிருந்த அரசாங்கத்தை பொறுப்பேற்றபடியால் அதனை ஒழுங்கமைப்பதற்கு சற்று தாமதமாகிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

மார்ச் மாத இறுதிக்குள்

# கிழக்கு மாகாண மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவர்!

(கொழும்பு)

யுத்த அனர்த்தங்களினால் கிழக்கு மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் அனைவரும் மார்ச்மாதத்திற்குள் மீளக்குடியமர்த்தப்படுவார்கள், என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் போதிய நிதி இல்லாமையினால் அகதிகளை மீளக்குடியமர்த்தும்பணி தாமதமடைந்தாலும் எதிர்வரும் மார்ச்மாதத்துக்குள் கிழக்கு மாகாணத்தில் மக்கள் அனைவரும் தத்தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுவிடுவார்கள்.

அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்குமிடையில் சமாதானம் ஏற்படுவதை இப்பகுதிமக்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றார்கள்'' என்றும் கூறினார். வி-ரி

# திருமலை மாவட்டத்தில் அமைதி நிலவுகிறதாம்

(கொழும்பு)

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து திருமலை மாவட்டத்தில் பூரண அமைதி நிலவுவதாக பிரதி பொலிஸ் மா அதிபர் விமால குணத்திலக்கா தெரிவித்துள்ளார்,

தாக்குதல் தவிர்ப்பு அமுலுக்கு வந்த 3 வாரத்துக்குள் திருமலை மாவட்டத்தில் எந்த ஒரு பெரிய மோதல்களும் இடம்பெறவில்லை இதனால் அங்கு சுமூகமான வாழ்க்கையை மக்கள் வாழத் தொடங்கியதுடன், மக்கள் வீதிகளில் பகலிலும் இரவிலும் எதுவித அச்சமுமின்றி நடமாடுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது என்றும் அவர் கூறினார். விரி

# மாணவ தாதிகள் பரீட்சை அனுமதி அட்டைகள்

[பண்டத்தரிப்பு]

மாணவ தாதிகள் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்த சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் கொழும்பிலிருந்து சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் யாழ் சுகாதார திணைக்களத்திற்குநேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை யாழ். தாதிகள் பயிற்சி பாடசாலையில் எதிர்வரும் 5ம் திகதி நடைபெறவுள்ளது.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து இப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கான அனுமதி அட்டைகளும் யாழ் சுகாதார திணைக்கள பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் நேரடியாக பணிமனைக்கு வந்து இதனை பெற்று பரீட்சைக்கு தோற்ற முடியும் என்றும் யாழ். சுகாதார திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (71)

திருமலையில்

# தொலை தொடர்புகளுக்கு 45 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில், தொலைத் தொடர்பு சேவையை விஸ்தரிப்பு செய்வதற்கு அரசாங்கம் 45 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தின் அடிப்படையில், முதலில் திருக்கோணமலை மாவட்டத்தில் 4650 தொலைபேசித் தொடர்புகள் ஏற்படுத்தப்படும் இதற்காக தென்கொரிய நிறுவனம் ஒன்றுடன் அரசு நேற்றுமுன்தினம் கைச்சாத்திட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

[வி-ரி]

# ராணுவதீர்வு இல்லையென்றால் பூநகரி முகாமை அகற்றினால் என்ன?

## கொழும்பு பத்திரிகை கேள்

(கொழும்பு)

அரசாங்கம் இராணுவத் தீர்வில் நம்பிக்கை வைக்கவில்லை என்றால், பூநகரி இராணுவ முகாமை அகற்றினால் என்ன என்று வீரகேசரியில் வெளியான கட்டுரை ஒன்றில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் கடினமான பதிலாலும், புலிகளின் தளராத பிடியினாலும் எதிர்காலம் கேள்விக்குள்ளாகின்றது என்றும், இராணுவத்தின் மனப்போக்கில் முழுமையான தளர்வை அரசாங்கம் ஏற்படுத்த முடியாமற்போனதே இந்த இறுக்கமான நிலை தோன்றக் காரணம் என்றும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் இராணுவ வளர்ச்சியை ஜனாதிபதி ஒப்புக்கொள்வது போல அவரது இந்து பத்திரிகைப் பேட்டி அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் கொடுக்கும் வாக்குறுதிகளை, கொழும்பு வந்ததும் நிறைவேற்ற முடியாதென்றால் அந்நிலை பேச்சுவார்த்தை தொடர்வதற்கு ஒருபோது வழிசெய்யாது என்றும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டைக் கைப்பற்றும் நோக்கம் இல்லையென்பதைக் காட்டுவதற்காவது, பூநகரி முகாமை அகற்றுங்கள் என்று புலிகள் கேட்டிருக்கின்றனர் என்றும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு—கிழக்கு பகுதிகளில்

# சமூக வானொலிநிலையங்கள் நிறுவுவதற்கு உத்தேசம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சமூக வானொலி நிலையங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது என்று தகவல் துறை உல்லாச விமானப் போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் அமைச்சர் உரையாற்றுகையில் மேற்படித் தகவலை வெளியிட்டார்

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், வடக்கு-கிழக்கில் சமூக வானொலி நிலையங்களை நிறுவுவதன் மூலம், நாட்டில் சமாதானமும், ஒற்றுமையும் நிலவுவதற்கு, இந்த வானொலி நிலையங்கள் பெரும் பங்களிப்பு அளிக்கும் ஜனநாயக நாட்டின் அபிவிருத்திக்கு, சமூக வானொலி நிலையங்கள் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கின்றது என்று கூறினார்.

(வி-ரி)

1994 க. பொ. த. [உ/த] பரீட்சை

# 15.000பேர்விடைத்தாள்களை மீளாய்வு செய்ய கோரிக்கை

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட்டில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர), பரீட்சைக்கு தோற்றிய ஒன்றரை லட்சம பரீட்சார்த்திகளில் சுமார் பதினையாயிரம் பேர் தமது விடைத்தாள்களை மீளாய்வு செய்யுமாறு கோரியுள்ளனர்.

விடைத் தாள்களை மீளாய்வு செய்வது ஒரு கடினமான முறையாகும். விடைத்தாள்களை மீளாய்வு செய்வது தொடர்பான பணிகளில் நாம் இப்போது ஈடுபட்டுள்ளோம். மார்ச்மாத முடிவில் மீளாய்வு முடிவுகள் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்கள பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதேவேளை கடந்த டிசம்பரில் நடைபெற்ற க. பொ. த. (சாதாரணதர) பரீட்சைக்குரிய சில பாடங்களின் செயல்முறைப் பரீட்சைகளும் நடத்துவதற்கு பரீட்சை திணைக்களம் ஒழுங்குகளை செய்து வருகிறது.

இசை, நடனம் போன்ற பாடங்களின் செயல்முறை பரீட்சைகள் நடத்துவதற்கான திகதி விரைவில் நிர்ணயிக்கப்படும் என்று அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ரி)

தமிழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தார்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 1460 பேருமாக மொத்தம் 1600 பேர் விரைவில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளனர். (வி-ரி)

பேச்சுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டமானை சந்தித்து தமிழர் ஐக்கிய அமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென தீர்மானித்ததுடன் அவ் அமைப்பிற்கு தலைமைதாங்குமாறு தொண்டமானுக்கு அழைப்பு விடுத்ததாகவும் வெளியான தகவல்கள் தவறானவை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ரி)

ஒரு கட்டத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் நிருபர் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையை கொழும்பில் அன்றி யாழ்ப்பாணத்தில் நடாத்துவதன் மூலம், அரசாங்கம் சமாதானத்தில் தனது பற்றுறுதியையும் சமாதானத்தை விரும்பும் மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் காட்டிவருகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். -ரி

# மரண அறிவித்தல்

ஆசிரியமணி

ஆர். ரி. சுப்பிரமணியம் ஜே. பி.

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவலை வாழ்விடமாகவும் கொண்ட இளைப்பாறிய அதிபர் ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் ஜே.பி. 30-01-95 திங்கள் இரவு காலமானார். அன்னார் வேதநாயகி, குமாரமூர்த்தி காலஞ்சென்ற டாக்டர் விநாயகமூர்த்தி ஆகியோரின் அருமைத் தந்தையும், டாக்டர் பொ. நாகலிங்கம். கமலகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். 31-01-95 செவ்வாய் பிற்பகல் 3-00 மணிவரை கொக்குவில் பொற்பதி வீதியிலுள்ள இல்லத்தில் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அன்னாரின் மரணச்சடங்கு சாவகச்சேரி வடக்கில் உள்ள இல்லத்தில் [இன்று] 01-02-95 புதன் பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பொ. நாகலிங்கம் (மருமகன்)

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

(சி-1387)

கண்காணிப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லும் அம்மாவட்டங்களில் தங்களுக்குரிய பணியை இதுவரையும் ஆரம்பிக்கவில்லை.

வவுனியாவிற்கும் கிழக்கிலங்கைக்கும் சென்றுள்ள யுத்தநிறுத்த கண்காணிப்பு குழுவில் அரசுதரப்பு பிரதிநிதிகளும் வெளிநாட்டு உறுப்பினர்களும் இணைந்துள்ளதாகவும் இவர்களுடன் விடுதலைப்புலிகளுக்கும் இதுவரை இணையாத காரணத்தினால் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டு கண்காணிப்பு குழு பூரணமாகஇயங்கவில்லை என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது, -ரி

ஓய்வுபெறும்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வழங்குவதில் இப்போது இருந்துவரும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு இந்த நடவடிக்கை பெரிதும் உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதிய விண்ணப்பப் படிவங்களை சரிவரப் பூர்த்தி செய்யாததே ஓய்வூதியம் தாமதமாகக் கிடைப்பதற்கு முக்கிய காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக ஓய்வூதிய விண்ணப்பங்களை அனுப்புவதன் மூலம் தத்தமது அலுவலகங்களில் இந்த பணிக்கொடை கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஓய்வு பெற்ற பின்னர்வரும் முதலாவது மாதத்திலிருந்து ஓய்வூதியத்தை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. இ

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01-ம் திகதி அச்சிட் வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-